# திருச்சிராப்பள்ளி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (18.05.2016 முதல் 22.05.2016 வரை)

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை– 612 101**
போன்: 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in Fax: 0435 2472881

==========================================================================

**தேதி:17.05.16**

### கடந்த 4 நாட்களில் நிலவிய வானிலை (13.05.2016– 16.05.2016)

| காரணிகள் | கடந்த நாட்களில் வானிலை |
|---|---|
| மழை (மி.மீ.) | 3.7 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 35 – 39 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 26 – 29 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 3 – 8 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 32 – 95 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 3 – 17 |

### அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>18.05.2016 | நாள் 2<br>19.05.2016 | நாள் 3<br>20.05.2016 | நாள் 4<br>21.05.2016 | நாள் 5<br>22.05.2016 |
| மழை (மி.மீ.) | 45 | 20 | 25 | 8 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 27 | 27 | 27 | 29 | 30 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 24 | 24 | 24 | 26 | 27 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 6 | 6 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 90 – 95 | 90 – 95 | 90 – 95 | 85 – 88 | 85 – 88 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 15 | 15 | 15 | 10 | 10 |
| காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

18.05.2016 முதல் 22.05.2016 வரை வானம் மேகமூட்டத்துடன் இருள்சூழ்ந்து காணப்படும். எதிர்பார்க்கப்படும் மழை அளவு 8 – 45 மி.மீ.

***வேளாண் அறிவுரைகள் :***

**பயிர் : நெல், உளுந்து, எள், கரும்பு மற்றும் பருத்தி**

**நெல் தரிசு பருத்தி: பூக்கும் பருவம்**

- மழை நீர் சூழ்ந்துள்ள நெல், உளுந்து, எள், கரும்பு மற்றும் பருத்தி வயல்களில் உடனடியாக வடிகால் வசதி ஏற்படுத்தி நீரினை வடித்து வேர்பகுதிக்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்யவும்.
- எதிர்பார்க்கப்படும் மழையைப் பயன்படுத்தி கோடை உழவு செய்து களைகளை கட்டுப்படுத்துவதுடன் மண்ணிலுள்ள பூச்சிகளின் கூண்டுப் புழுக்களை அழிக்கலாம்.
- மண்ணின் ஈரத்தன்மையை பயன்படுத்தி பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைப்பூண்டு. சணப்பை மற்றும் கொளுஞ்சி போன்றவற்றைத் தெளிக்கவும்.

ஒம்/- வெ. இரவி.
இயக்குநர்

/உண்மை நகல்/

பேராசிரியர்(உழவியல்)